RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 206 | ஜூலை.29 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5


# பாகிஸ்தானுடனான போர் நடவடிக்கைகளை நிறுத்தியது ஏன்?

## மக்களவையில் ராஜ்நாத் சிங் விளக்கம்

புதுடெல்லி: ஜூலை.29-

பாகிஸ்தானுடனான போரை நிறுத்தியது ஏன் என மக்களவையில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கமளித்தார். மேலும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் அவர் அவையில் விரிவான பதிலளித்தார்.

மக்களவை இன்று தொடங்கியது முதலே எதிர்க்கட்சிகளின் அமளியால் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், மக்களவையில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதத்தை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்து பேசினார்.




மக்களவையில் பேசிய அவர், "நாட்டிற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த துணிச்சலான வீரர்களுக்கு நான் அஞ்சலி செலுத்துகிறேன். ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் இறையாண்மையின் அடையாளமாகும். எங்கள் நடவடிக்கைகள் முற்றிலும் தற்காப்புக்காகவே இருந்தன. ஆத்திரமூட்டும் அல்லது எல்லையை கைப்பற்றும் நோக்கங்களுக்காக அல்ல. இருப்பினும், மே 10, 2025 அன்று, அதிகாலை 1.30 மணியளவில், பாகிஸ்தான் ஏவுகணைகள், ட்ரோன்கள், ராக்கெட்டுகள் மற்றும் பிற நீண்ட தூர ஆயுதங்களைப் பயன்படுத்தி இந்தியா மீது பெரிய அளவிலான தாக்குதலை நடத்தியது. நமது எஸ்400 ஆகாஷ் வான் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு சிறப்பாக செயல்பட்டு பாகிஸ்தானின் தாக்குதலை முற்றிலுமாக முறியடித்தன. இந்தியாவுக்கு எந்த பாதிப்பும் இதனால் ஏற்படவில்லை.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் நடத்திய ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் 22 நிமிடங்களில் 100க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்திய ஆயுதப்படை ஒன்பது பயங்கரவாத தளங்களின் மீது துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.

மே 10 ஆம் தேதி, பாகிஸ்தானில் உள்ள பல விமானநிலையங்களில் இந்திய விமானப்படை கடுமையாகத் தாக்கியபோது, பாகிஸ்தான் தோல்வியை ஒப்புக்கொண்டு, போர் நிறுத்தத்துக்கு முன்வந்தது. அப்போது, இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்ற எச்சரிக்கையுடன் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டோம். எதிர்காலத்தில் பாகிஸ்தானின் தரப்பில் ஏதேனும் தவறு நடந்தால், இந்த நடவடிக்கை மீண்டும் தொடங்கப்படும்.


ஆபரேஷன் சிந்தூர் என்பது பிரதேசத்தைக் கைப்பற்றவோ அல்லது போரை தூண்டவோ தொடங்கப்படவில்லை, மாறாக சமீபத்திய பயங்கரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கவும், பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத உள்கட்டமைப்பை அழிக்கவும் தொடங்கப்பட்டது. பாகிஸ்தான் பல ஆண்டுகளாக வளர்த்து வந்த பயங்கரவாதக் குழுக்களை ஒழிப்பதே ஆபரேஷன் சிந்தூரின் நோக்கம்.

எங்களின் ராணுவ நோக்கத்தை அடைந்ததால் போரை நிறுத்தினோம். எந்தவொரு அழுத்தத்தாலும் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது என்று கூறுவது ஆதாரமற்றது, முற்றிலும் தவறானது. எனது அரசியல் வாழ்க்கையில், நான் எப்போதும் பொய்களைப் பேசுவதில்லை" என்றார்

மேலும், "எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் நமது விமானங்களில் எத்தனை சுட்டு வீழ்த்தப்பட்டன என்று கேட்கிறார்கள். அவர்களின் கேள்வி நமது தேசிய உணர்வுகளைப் போதுமான அளவு பிரதிபலிக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். நமது ஆயுதப் படைகள் எத்தனை எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின என்ற கேள்வியையே அவர்கள் கேட்க வேண்டும். இந்தியா எதிரிகளின் பயங்கரவாதத் தளங்களை அழித்ததா என்றால், பதில் ஆம் என்பதுதான். நீங்கள் ஒரு கேள்வி கேட்பதாக இருந்தால், இந்த நடவடிக்கையில் நமது துணிச்சலான வீரர்கள் யாராவது பாதிக்கப்பட்டார்களா என்பதுதான். இதற்கான பதில், இல்லை என்பதுதான். நமது வீரர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை" என்றார்.



■ மதுரையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிவி கதிரவன் தலைமையில் மணிகண்டன்,ரெட்காசி,தென்னிந்திய பார்வர்டு பிளாக் தலைவர் கே சி திருமாறன், தமிழ் தேசிய பார்வேர்ட் பிளாக் தலைவர்சங்கிலி, நேதாஜி சுபாஷ் சேனை தலைவர் மகாராஜன்,சுமன்,மற்றும் தேவரின பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகள் தமிழகம் முழுவதும் உள்ள அரசு விடுதிகளில் ஜாதியின் பெயர் இருக்கக்கூடாது என்றும் மாறாக ஜாதியின் அடிப்படையில் இருந்த விடுதிகள் அனைத்தும் சமூக நீதி விடுதிகள் என்று அழைக்கப்பட வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதன் காரணமாக விடுதிகளின் பெயர் மாற்றங்கள் நடைபெற்று வருகிறது. இதில் அரசு கள்ளர் விடுதிகள் சமூக நீதி விடுதிகள் என்று பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் அந்த அரசாணையை திரும்பப் பெற வேண்டும் என்றும் இதனை வலியுறுத்தி கோரிக்கையை மனுவினை மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.



# காஞ்சியில் நடைபயணம்: நெசவாளரிடம் குறைகளை கேட்டறிந்த அன்புமணி

காஞ்சிபுரம், ஜூலை.29-

காஞ்சிபுரத்தில் நடைபயணம் மேற்கொண்ட பாமக தலைவர் அன்புமணி, நெசவாளர்களின் குறைகளை கேட்டறிந்தார். தமிழக மக்களின் உரிமை மீட்போம் என்ற பெயரில், பாமக தலைவர் அன்புமணி 100 நாள் நடைபயணத்தை மேற்கொண்டு வருகிறார். இதில், 3வது நாளாக நேற்று காஞ்சிபுரம் சட்டமன்ற பகுதியில் நடைபயணம் மேற்கொண்டார்.

முன்னதாக, காஞ்சிபுரம் நத்தப்பேட்டை மற்றும் வையாவூர் ஏரிகளை பார்வையிட்டார். இதையடுத்து, காஞ்சிபுரம் பட்டு நெசவுக்கு புகழ் பெற்ற பகுதி என்பதால், காஞ்சிபுரத்தில் பட்டு நெசவுக்கு பிரசித்தி பெற்ற பிள்ளையார்பாளையம் பகுதியில் நெசவாளர்கள் வீட்டுக்கு சென்று, நெசவாளர்களின் குறைகளை அன்புமணி கேட்டறிந்தார்.

மேலும், பிள்ளையார் பாளையம் பகுதியில் உள்ள நெசவாளர் ஒரு வீட்டிற்கு சென்ற அன்புமணி, நெசவாளர்களிடம் நெசவு செய்வது எப்படி என்பது கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து அவரும் சோதனை முறையில் நெசவு செய்தார். பின்னர், நெசவாளர்கள், அன்புமணியிடம் கலந்துரையாடினர். குறிப்பாக, மழைக் காலங்களில் நெசவு செய்ய முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறோம்.

கூட்டுறவு சங்கங்களில் இருந்து முறையாக எங்களுக்கு, ' பாவு' கொடுப்பதில்லை என தெரிவித்தனர். இதனால், முன்பு போல் நெசவுத்தொழில் வருமானம் இருப்பதில்லை என தெரிவித்தனர். மேலும், கூட்டுறவு சங்கங்களிலிருந்து போனஸ் மற்றும் ஊக்கத்தொகை வழங்குவதில்லை எனவும் புகார் தெரிவித்தனர். இதே போல் பெரும்புதூர் பகுதியில் அன்புமணி நடைபயணம் மேற்கொண்டு மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் மினி உலக முதலீட்டாளர் மாநாடு

## அமைச்சர் டிஆர்பி.ராஜா தகவல்

தூத்துக்குடி, ஜூலை.29-

தூத்துக்குடி மாவட்டத்தில் மினி உலக முதலீட்டாளர் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாக தமிழக தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டிஆர்பி.ராஜா கூறினார்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அமைச்சர் டிஆர்பி.ராஜா நேற்று சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தூத்துக்குடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலை திறப்பு விழா பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது.

இந்த கார் தொழிற்சாலையை ஆகஸ்ட் 4ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார். மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் மினி உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தவும் திட்டமுள்ளது. அதில் பல்வேறு புதிய தொழில்கள் வர உள்ளன. பிரதமர் மோடியின் புதிய திட்டங்களால் தமிழ்நாட்டுக்கு பலன்கள் உள்ளன. இருப்பினும் தூத்துக்குடி மாவட்டத்துக்கான வெள்ள நிவாரணத் தொகையையும், கல்வித் தொகையையும் பிரதமர் கொடுத்திருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பரந்து விரிந்த மனது. பிரதமர் மோடி அறிவித்ததைவிட பன்மடங்கு பெரிய திட்ட அறிவிப்புகள் தூத்துக்குடிக்கு காத்திருக்கின்றன. வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி வரலாற்று வெற்றிபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# கூடுவாஞ்சேரி அருகே நடைபெற்ற காவலர் துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு சான்றிதழ்: டிஜிபி சங்கர் ஜிவால் வழங்கினார்

சென்னை, ஜூலை,29-

கூடுவாஞ்சேரி அருகே, ஒத்திவாக்கத்தில் நடைபெற்ற காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பாராட்டு சான்றிதழ்களை தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் வழங்கினார். தமிழ்நாடு காவல்துறை, ஆண் மற்றும் பெண் காவலர்களின் துப்பாக்கி சுடும் திறமைகளை அங்கீகரிக்கவும், அவர்களின் துப்பாக்கி சுடும் திறன்களை மேம்படுத்தவும் ஒவ்வொரு வருடமும் மாநில அளவிலான காவல்துறை துப்பாக்கி சுடும் போட்டிகளை நடத்தி வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம், ஒத்திவாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அதிதீ விரப்படை பள்ளி பயிற்சி மையம் துப்பாக்கி சுடு தளத்தில் கடந்த 24ம் தேதி முதல் 26ம் தேதி வரை ஆண் காவலர்களுக்கான போட்டிகள் தனியாகவும், பெண் காவலர்களுக்கான போட்டிகள் தனியாகவும் நடத்தப்பட்டன.




இதில், மொத்தம் 13 வகையான போட்டிகள் 3 பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்டது. ரைபில் பிரிவு 5 போட்டிகள், பிஸ்டல் ரிவால்வர் பிரிவு 4 போட்டிகள் மற்றும் கார்பைன் ஸ்டன் கன் பிரிவு 4 போட்டிகள் இப்போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறையின் பல்வேறு நகரங்கள், மண்டலங்கள் மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 204 ஆண் போட்டியாளர்கள் 9 அணிகளாகவும் 104 பெண் போட்டியாளர்கள் 8 அணிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதனைதொடர்ந்து, நேற்று முந்தினம் நடைபெற்ற நிறைவு விழாவில் துப்பாக்கி சுடும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், வெற்றி பெற்ற அணிகளுக்கும் தமிழக காவல்துறை டிஜிபி சங்கர்ஜிவால் பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சுழற் கேடயங்களை அளித்து வாழ்த்துரை வழங்கினார். இதில், ஆண்களுக்கான மாநில துப்பாக்கி சுடுதல் போட்டி 2025ன் ஒட்டுமொத்த சாம்பியன்சிப் கோப்பையை தெற்கு மண்டலம் அணி வென்றது. அதுபோல தலைமையிட அணி ஒட்டுமொத்த சாம்பியன்சிப் இரண்டாமிட கோப்பையையும் ஆயதப்படை அணி ஒட்டுமொத்த சாம்பியன்சிப் மூன்றாமிட கோப்பையையும் வென்றன.

பெண்களுக்கான மாநில துப்பாக்கி சுடுதல் போட்டி2025ன் ஒட்டுமொத்த சாம்பியன்சிப் கோப்பையை மேற்கு மண்டலம் அணி வென்றது. அதுபோல வடக்கு மண்டலம் அணி ஒட்டுமொத்த சாம்பியன்சிப் இரண்டாமிட கோப்பையையும் சென்னை மாநகர காவல் அணி ஒட்டுமொத்த சாம்பியன்சிப் மூன்றாமிட கோப்பையையும் வென்றன. இவை தவிர ஆண், பெண் பிரிவில் சிறந்த துப்பாக்கி சுடும் வீரர்களுக்கு ஒட்டுமொத்த பெஸ்ட் ஷாட் மெடல் ரிவால்வர், பிஸ்டல் பிரிவிலும் கார்பைன் ஸ்டன்கன் பிரிவிலும் வழங்கப்பட்டன.

# டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்: ஆட்சியர் அழைப்பு

சென்னை, ஜூலை.29-

டிஎன்பிஎஸ்சி தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் சென்னையில் நடைபெற்று வருவதாகவும், தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் வகுப்புகளில் பங்கேற்று பயனடையுமாறும் மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே அழைப்பு விடுத்துள்ளார்.




தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) சார்பில் அனைத்து வகை மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு நடத்தப்படும் குரூப்2, 2ஏ தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் கடந்த 21ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள சிஎஸ்ஐ காது கேளாதோர் மேல்நிலைப் பள்ளியில் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 10 முதல் மதியம் 1 மணிவரை பயிற்சி வழங்கப்படுகிறது. டிஎன்பிஎஸ்சி குரூப்2, 2ஏ தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் ஆக. 13ம் தேதியாகும்.

பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அந்த வகையில் சென்னையை சேர்ந்த தகுதிவாய்ந்த அனைத்து வகை மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் இணைய வழியில் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்பப்படிவ நகலுடன், ஆதார் அட்டை நகல், புகைப்படம் ஆகியவற்றுடன் பயிற்சியில் பங்கேற்று பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார். பயிற்சிக்கு கட்டணமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# வேலூரில், அதிமுக சார்பில் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம்

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் கஸ்பா, மேட்டு பஜார் தெரு, மஹபூப் ஷாதிகானா கல்யாண மண்டபத்தில், அதிமுக சார்பில் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம், மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு தலைமையிலும், எலும்பு முறிவு நிபுணர் மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர். விஜய் வெங்கடேஷ் ஏற்பாட்டில் இந்த இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் டாக்டர். சிவகுமார் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் என 20க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பொதுநல மருத்துவ ஆலோசனை, ரத்த சர்க்கரை அளவு பரிசோதனை, ரத்த அழுத்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அதிமுக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி.பி.எம்.குமார், அம்மா பேரவை மாவட்டத் துணை செயலாளர் என்.பாலாஜி, பகுதி கழக செயலாளர் நாகு (எ) நாகராஜ், வட்ட செயலாளர் டிக்காராம், தோட்டப்பாளையம் பகுதி செயலாளர் டி.டி.ஆர். ரகு, தேவராஜ், ஐ.டி.விங். கோபால், மற்றும் உறுப்பினர்கள், பயனாளிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில், நிறுவனர் ராமதாஸ் 87வது பிறந்தநாள் விழா முன்னிட்டு நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம், வேலூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நிறுவனத் தலைவர் ராமதாஸ் 87வது பிறந்தநாள் விழா மற்றும் பசுமைத்தாயகம் நாள் விழா முன்னிட்டு சமூக போராளி, உலகத்திற்கு பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்து, அனைத்து சமுதாய மக்களின் நலனுக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து போராடும் டாக்டர். ராமதாஸ் பிறந்தநாள் விழா மற்றும் நலதிட்டங்கள் வழங்கும் விழா, வேலூர் மாவட்டத் தலைவர் அ.பா. சாரதிவர்மன் மாவட்ட செயலாளர் வி.எஸ் வெங்கடேசன் ஆகியோர் தலைமையிலும், வேலூர் மாவட்ட வன்னியர் சங்கம் மாவட்டச் செயலாளர் சுரேஷ்பாபு முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் மாநில பொறுப்பாளர்கள் ம.வரலட்சுமி, டி.ரஞ்சன் ஆகியோர் முன்னிலையில், ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார் வரவேற்பு உரையாற்றி கௌரவித்து,

வேலூர் வள்ளலாரில் மாசக்தி விநாயகர் கோவிலில் சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நடத்தி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து நீதிமன்றம் எதிரில் இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பள்ளிகொண்டா, கேமரான்பேட்டை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களும், அணைக்கட்டு தொகுதி பீஞ்சமந்தை கிராமம், ஒடுக்கத்தூர் பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் விவசாயிகளுக்கு கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், சிவா, பள்ளிகொண்டா பேரூராட்சி பா.ம.க தலைவர் பரணிதரன், செயலாளர் குமரவேல், மாவட்ட அமைப்பு செயலாளர் பாண்டியன், வேலூர் மாநகரத் தலைவர் தாமு, மண்டல பொறுப்பாளர்கள் சிவலிங்கம், கோபி பாமக பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் மற்றும் அனைத்து சமுதாய வளர்ச்சிக்கு பாடுபட்ட தலைவராக வழங்கும் இவருடன் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# அ.இ.அதி.மு.க சார்பில் பழனியில் 12ஆம் வகுப்பு மாநிலத்தில் முதலிடம் பிடித்த மற்றும் பத்தாம் வகுப்பில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா

திண்டுக்கல், ஜூலை.29-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அ.இ.அ.தி.மு.க 25வது வார்டு உறுப்பினர் ஜென்னத்துல் பிர்தெளஸ் ராஜா முகமது அவர்கள் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் 12ஆம் வகுப்பு பயின்று மாநிலத்தில் முதலில் பிடித்த மாணவி599/600 ஓவியா ஞ்லிக்கு பாராட்டுக்கள் தெரிவிக்க ப்பட்டு பரிசுகள் வழங்கப் பட்டன வெள்ளிகாசு மற்றும் பரிசு பெட்டகம் மரக்கன்றுகள் கொடுத்து கௌரிக்கப்பட்டது அதைத் தொடர்ந்து பழனி கல்வி வட்டம் முதல் மூன்று இடங்கள் பெற்ற பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கும் பாராட்டுக்கள் மற்றும் பரிசு பெட்டகங்கள் வழங்கப்பட்டன நான்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன அதைத் தொடர்ந்து இலங்கையில் நடைபெற்ற ஆசிய அளவிலான யோகா போட்டியில் தங்கம் பதக்கம் வென்ற மாணவிக்கு பரிசுகள் மற்றும் வழங்கப்பட்டன இந்நிக ழ்ச்சியில் அஇஅதிமுக கிழக்கு மாவட்ட பொருளாளரும் பழனி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வேணுகோபால், நகர செயலாளர் முருகானந்தம், கிழக்கு ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன் நெய்க்காரப்பட்டி பேரூர் செயலாளர் விஜயசேகரன், பாலசமுத்திரம் பேரூர் கழக செயலாளர், சக்திவேல், ஆயக்குடி பேரூர் கழகச் செயலாளர் சசிகுமார், மீனவர் அணி செயலாளர் மகுடீஸ்வரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அன்னவர்தீன், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் பன்னாடி ராஜா ,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்



# நெடுஞ்சாலை துறையின் வைக்கப்பட்டுள்ள ஊர் பெயர் பலகை கொட்டகை போட்டு மறைத்து வைத்துள்ள அவலம்கண்டும் காணாமல் உள்ள நெடுஞ்சாலை துறையினர்

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம் துத்திப்பட்டு பகுதியில்நெடுஞ்சாலைத் துறையினரால் வைக்கப்பட்டிருந்த ஊர் பெயர் பலகை மறைத்து கொட்டகை போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்

பெயர் பலகை என்பது நாடு முழுவதும் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தங்கள் செல்ல வேண்டிய இடத்தை எவருடைய உதவி இன்றி பெயர் பலகையை பார்த்து அறிந்து பயணத்தை மேற்கொள்ளும் வகையில் நாடு முழுவதும் பெயர் அறிவிப்பு பலகை வைக்கப் பட்டுள்ளது அதேபோல் நெடுஞ்சாலைத்துறையினரால் துத்திப்பட்டு பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு பெயர் பலகையை மறைத்து கடையை கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட துறையினர் உடனடியாக வாகன ஓட்டி மற்றும் பொதுமக்கள் நலனை கருதி ஆக்கிரமிப்புகளை அகற்றிபெயர் பலகை முழுவதுமாக தெரியும்படி வைக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகள் சமூக ஆர்வலர்கள் பொது மக்கள் தெரி விக்கின்றனர் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவ ஆர்.அழகுமீனா, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

# பல்லாவரத்தில் ஸ்ரீ தேவி வேம்புலி அம்மன் கோவில் 83ஆம் ஆண்டு தீமிதி திருவிழா முன்னிட்டு 31ஆம் ஆண்டு இன்னிசை நிகழ்ச்சி

பல்லாவரம், ஜூலை.29-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ரயில் நிலையம் அருகில் ஸ்ரீதேவி வேம்புலி அம்மன் கோவில் 83ஆம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு 31ஆம் ஆண்டு இன்னிசை நிகழ்ச்சி பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் டி.ஜெயபிரகாஷ் தலைமையில் பல்லாவரம் பகுதி துணைச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் எஸ்.முனுசாமி, டி..அன்பு, சங்கர், ஜே.குமரன், கே.ராஜா, பிரித்திவிராஜ், அரவிந்தன், வருண் பிரபு, அமுல், பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் இன்பராஜ் சம்போ விஜய் டிவி சூப்பர் சிங்கர் மூக்குத்தி முருகன் இன்னிசை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது



இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் டி.கே.எம் சின்னையா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் ப.தன்சிங், பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் டி.ஜெயபிரகாஷ், கீழ்கட்டளை பகுதி கழகச் செயலாளர் சந்திரசேகர் ராஜா

ஆகியோர் கலந்து கொண்டு இன்னிசை நிகழ்ச்சியை பார்த்து ரசித்துக் கொண்டனர் பின்னர் அதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களுக்கு சால்வை போட்டு பூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் இந்த நிகழ்ச்சியில் எம்.குமார், நாகேஸ்வரன், சரஸ்வதி ஜெய்சங்கர், கௌதம், சந்தானம், பாஸ்கர், பி.எல்.ஆர்.ட்ரான்ஸ்போர்ட் லிங்கராஜ் உள்ளிட்ட மாவட்டம் நகரம் பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்

இறுதியில் 15வது வட்ட பொருளாளர் எஸ்.கோபிநாதன் நன்றி உரையாற்றினார்

# வேலூர் தொன்போஸ்கோ உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம்

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, வேலூர் தொன்போஸ்கோ உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம் ஆர்.சி.எம். பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு தலைவரும், தலைமை ஆசிரியருமான டாக்டர். எஸ்.பெலவேந்தரம் மற்றும் உதவி தலைமை ஆசிரியர் எல். ரொசாரியோ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.



இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தொன்போஸ்கோ உயர்நிலைப்பள்ளி தாளாளர் அருட் தந்தை டாக்டர். ஏ.ராய்லாசர், வேலூர் மறை மாவட்ட மேலாளர் ஆர்.சி.எம் பள்ளிகள் ஏ.லூர்து சேவியர், நிர்வாகி எல்.ஜோசப், உதவி பங்குத்தந்தை ஏ.பிரபு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பள்ளி வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்ளும் முன்னாள் மாணவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வாழ்த்து தெரிவித்து பாராட்டி ஆசீர்வாதித்தனார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் குத்தூஸ், செயலாளர் அறிவழகன், பொருளாளர் பாண்டியன், முன்னாள் ஆசிரியரும் ஒருங்கிணைப்பாளருமான சேவியர் ஜெயராஜ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் 1931 ஆம் ஆண்டு முதல் இது நாள் வரை படித்த மாணவர்கள் சேவை மனப்பான்மையுடன் ஒருங்கிணைந்து, சங்கமாக உருவாக்கி இங்கு படித்த மாணவர்கள் இந்த பள்ளிக்கு பல்வேறு பணிகளை மேற்கொண்டு பெருமை சேர்த்து வருகின்றனர். இப்பள்ளி முன்னாள் மாணவர்கள் பல்வேறு உயர் பதவித்துறைகளில் சாதனைகளை படைக்கும் விதத்தில் உயர்ந்துள்ளனர். இதுகுறித்து முன்னாள் மாணவர்களை பாராட்டி சிறப்புரையாற்றினர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளரையும் சிறப்பு விருந்தினர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் முன்னாள் மாணவர்கள் சங்கம் அன்புடன் வரவேற்று, வாழ்த்து தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இப்பள்ளியில் படித்த மாணவர்களும் அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து சிறப்புரையாற்றி மகிழ்ந்தனர். இறுதியில் தேசியகீதம் பாடப்பட்டு, நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.

## "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 29.7.2025 அன்று

# காரைக்குடி மாநகராட்சி, சிவகங்கை, மானாமதுரை நகராட்சி, சிங்கம்புணரி பேரூராட்சிமற்றும் தேவகோட்டை, இளையான்குடி ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.29-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 29 ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:4,5 மற்றும் 16 ஆகிய பகுதிகளுக்கென கழனிவாசல் ஸ்ரீ முத்துகிருஷ்ண மஹாலிலும், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 11,12,13,14,15 மற்றும் 16 ஆகிய பகுதிகளுக்கென T.K.A மஹாலிலும், மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 4,5 ஆகிய பகுதிகளுக்கென அனுசியா மஹாலிலும், சிங்கம்புணரி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,5,6,7,8,9,10,16,17,18 ஆகிய பகுதிகளுக்கென சிங்கம்புணரி கலைஞர் அரங்கத்திலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்லங்குடி, நாச்சாங்குளம், சிறுவத்தி, வீரை ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கல்லங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும்,

இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெஞ்சாத்தூர், சாத்தனி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சாத்தனி சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி

செவ்வாய்க்கிழமை 29.7.2025



# தமிழ்நாடு அரசின் மூலம் அனைத்து துறைகளின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது

கன்னியாகுமரி, ஜூலை.29-

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலையத்தில் பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு ஏழை எளிய கிராமப்புற மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்களை அறிவித்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் சிகிச்சை அளிக்கும் திட்டம், மக்களை தேடி மருத்துவம், சாலை, பேருந்து, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டங்கள், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு கடனுதவிகள் வழங்கியது, முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண் திட்டம் குறித்தும், தொழிலாளர்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் மகளிர் விடியல் பயணத்திட்டம் ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர், உங்களைத்தேடி உங்கள் ஊரில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் பல்வேறு துறைகளில் பணியின் போது காலமானவர்களின் வாரிசுதார ர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கியது ஆகியவை குறித்தும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்தது, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கியது, உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்துகொண்டு பயன்பெற்றார்கள்.



■ மதுரை அரசரடி இரயில்வே நடைப்பயிற்சி மைதானத்தின்முன்பாக அதிகமான விபத்துகள் எற்படுவதால்மெயின் ரோட்டில் வேகத்தடை அமைக்க வேண்டி கோரிக்கை மனுவினைமதுரை மாவட்டஆட்சியர்கே.ஜே.பிரவீன்குமாரிடம் 58வது வார்டு மாமன்ற உறுப்பினர்மா. ஜெயராம் அளித்தார் . மற்றும் வாக்கர்ஸ் கிளப்நிர்வாகிகள் பாண்டிச்செல்வம், எடின், பிரசாத், ராஜா, மனோகரன், திருமலை,சேகர், மாரி ஆகியோர் உடனிருந்தனர்.



# அரசு விதிமுறைகளை மீறிய தனியார் கல்குவாரி மீண்டும் தொடங்குவதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு

மதுரை, ஜூலை.29-

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் கருங்காலக்குடி காடம்பட்டி கிராம பொதுமக்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர் .இம்மனுவில் சிவகங்கை மாவட்டம் மல்லாக்கோட்டையில் அரசு விதிகளை மீது செயல்பட்டு வந்த தனியார் நிறுவனம் தற்போது கருங்காலக்குடி கிராமத்தில் புதியதாக கல்குவாரி தொடங்க அனுமதி பெற்றுள்ளதாகவும் அந்த இடம் ஏற்கனவே அரசுக்கு சொந்தமாக இருந்து தனியார் பெயரில் மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வாய்க்காலை மூடி சுற்றுச்சுவர் அமைத்துள்ளதாகவும்.

இதனால் தங்கள் பகுதிகளில் விவசாய விளை நிலங்களில்சுற்றுச்சூழல் மாசு பாதிக்கப்படுவதோடு கிராம பொதுமக்களுக்கு நுரையீரல் தொற்று நோய்பரவும் அபாயம் அமையும் என தங்களது புகாரில் தெரிவித்துள்ளதோடு இதில் பல சட்ட விதிமுறைகள் இருப்பதால் இந்த அனுமதியை ரத்து செய்வதோடு மட்டுமல்லாமல் கல் குவாரி தொடங்குவதற்கு முற்றிலும் தடை விதிக்க வேண்டும் அரசு நிலங்களை மீட்டு என்று கோரிக்கை வைத்துள்ளனர்.



■ திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் முன்னாள் இந்திய ஜனாதிபதி ஏபிஜே அப்துல்கலாம் நினைவு நாளை முன்னிட்டு கிராம பொதுமக்களுக்கு வட்டார ஒருங்கிணைப்பாளர் செல்வி உள்ளிட்டோர் வீடுவீடாக சென்று மரக்கன்று வழங்கினார்கள்.

# பத்மநாபபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.1.38 கோடி மதிப்பில் கூடுதல் கட்டிடத்திற்கு அமைச்சர் த.மனோ தங்கராஜ் அடிக்கல் நாட்டினார்



கன்னியாகுமரி, ஜூலை.29-

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் தக்கலை பத்மநாபபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வக கட்டிடம் மற்றும் இந்திய மருத்துவ பிரிவு கட்டத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணியினை துவக்கிவைத்து தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மாவட்டத்திற்குட்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட மருத்துவ மனைகளில் பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப கூடுதல் கட்ட நிதிஒதுக்கீடு, நவீன, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மருத்துவமனைக்கு வழங்கி வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து பத்மநாபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையானது தக்கலை, பத்மநாபபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியிலிருந்து வரும் நோயாளிகளுக்கு மேம்பட்ட மருத்துவ சேவையை வழங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயளிகள் பிரிவு, ஆய்வகங்கள், மருந்தகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

தொடர்ந்து பத்மநாபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையினை மேம்படுத்தும் பொருட்டு, ரூ.1 கோடி மதிப்பில் மாவட்ட ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வக கட்டிடம் கட்டப்படவுள்ளது. இங்கு நுண்ணுயிரியல் ஆய்வகம், உயிர் வேதியியல் ஆய்வகம், ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் அறை, வைராலஜி ஆய்வகம், நோயியல் ஆய்வகம், பயிற்சி அறை, பதிவு அறை, சேமிப்பு அறை மற்றும் கிருமி நீக்கம் அறை அமைய உள்ளது. மேலும் ரூ.37.50 இலட்சம் மதிப்பில் இந்திய மருத்துவ பிரிவு கட்டிடமும் கட்டப்படவுள்ளது. இப்பிரிவு கட்டிடத்தில் மருத்துவர் அறை, சிகிச்கை அறை, மருந்து கிடங்கு, காத்திருப்போர் மண்டபம், மருந்தகம் உள்ளிட்டவைகள் கட்டப்படவுள்ளது. தொடர்ந்து பணிகள் குறித்த விளக்கங்களை பொறியாளர்களிடம் கேட்டறியப்பட்டது. கட்டிட பணிகளை வேகமாகவும், நேர்த்தியாகவும், விரைந்தும் கட்டி முடிக்க வேண்டும் என ஒப்பந்ததாரர் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் பத்மநாபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்கள். மேலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உள் நோயாளிகளை சந்தித்து அவர்களின் உடல்நலம் மற்றும் மருத்துவர்களால் வழங்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார்கள். உள்நேயாளிகளின் பரிசோதனை விவரங்கள், உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்து செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் அரசு மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை மேற்கொண்டு, அரசின் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் பத்மநாபபுரம் நகர்மன்ற தலைவர் திரு.அருள்சோபன், இணை இயக்குநர் மருத்துவம் மரு.சகாய ஸ்டீபன்ராஜ், செயற்பொறியாளர் திரு.ஜோசப் ரென்ஸ், உதவி செயற்பொறியாளர் திரு.பிரசாத், உண்டு உறைவிட மருத்துவர் மரு.கோலப்பன், கண்காணிப்பாளர் மரு.சோமசுந்தரம், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் நாடார் திருமண மண்டபத்தில் ஐயாகாமராஜர் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது தலைமை பி ஆர் செல்வராஜ் ஆர் கே கணேசன் முன்னிலை ஜேம்ஸ் சேவியர் வரவேற்புரை ஆர் வேலவன் தலைவர் உறவின்முறை முத்துப்பாண்டி உறவின்முறை செயலாளர் பரிசு வழங்குபவர் சரவணன் லிங்கம் தொழிலதிபர் இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கப்பட்டது அதிக மதிப்பெண் பெற்ற 30க்கும் மேற்பட்ட மாணவர் மாணவிகளுக்கு 1500 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.



■ திருப்புவனம் மடப்புரம் காவலாளி அஜித் குமார் கொலை வழக்கு சம்பந்தமாக 15 வது நாள் விசாரணை நேற்று (ஜூலை 28) அஜித்குமார் வீட்டிற்கு வந்த சிபி அதிகாரிகள் ஏழு பேர் கொண்ட இரு குழுக்களாக இரு வாகனங்களில் வந்தனர் ஒரு வாகனத்தில் அஜித் குமாரின் தாயார் மாலதி மற்றும் சகோதரர் நவீன் குமாரை அழைத்துக் கொண்டு மதுரை ஆத்திகுளத்தில் உள்ள சிபிஜ ஆபீஸ்க்கு அழைத்துச் சென்றனர். மற்றொரு சிபிஜ வாகனம் திருப்புவனம் காவல் நிலையத்தின் பின்புறம் உள்ள காவலர் குடியிருப்பு பகுதிக்கு சென்றனர் அங்கு தலைமை காவலர் கண்ணன் வீட்டிற்கு சென்றனர் அங்கு காவலர் கண்ணன் வீடு பூட்டி இருந்தது அதனை தொடர்ந்து திருப்புவனம் காவல் நிலையத்திற்கு வந்த சிபிஜ இது சம்பந்தமாக விசாரணை செய்துவிட்டு சிபிஜ அதிகாரிகள் மதுரை நோக்கி நேற்று புறப்பட்டு சென்றனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தேனூர் கிராமத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் "அன்பு இல்லங்கள்" வீடுகளின் கட்டிட பணிகளுக்கான பூமி பூஜையில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்து மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் வறுமை கோட்டிற்குள் உள்ள பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடுக்கான ஆணைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள், மாவட்ட ஊரக வளாச்சி முகமை திட்ட அலுவலர் திரு.வானதி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் மாவட்ட தீயணைப்பு மீட்பு பணிகள் துறைக்கு உபகரணங்கள் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்;ச்சியில் தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.அ.ப., அவர்கள் 'ஆப்த மித்ரா" எனும் திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பேரிடர் எதிர்கொள்வதற்காக உபயோகிக்கக்கூடிய அத்தியாவசியமான 30 வகையான பொருட்களை மாவட்ட தீயணைப்பு மீட்பு பணிகள் துறைக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு அவர்கள் மற்றும் தீயணைப்புத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட விக்கிரமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் உட்கர்ஷ்குமார், உசிலம்பட்டி வருவாய் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன்,வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கப்பாண்டியன், செல்லம்பட்டி திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் சுதாகர், விக்கிரமங்கலம் ஊராட்சி செயலாளர் தன பாண்டி, முதலைக்குளம் ஊராட்சி செயலாளர் இளங்கோவன், பானா மூப்பன்பட்டி ஊராட்சி செயலாளர் பால்பாண்டி, எரவார்பட்டி ஊராட்சி செயலாளர் பாண்டி, சக்கரப்ப நாயக்கனூர் ஊராட்சி செயலாளர் செல்லப்பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





■ வீரவிதை அகாடமியின் 9ம் ஆண்டு துவக்கவிழா மானாமதுரை வைகைத் திடலில் ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் தேசிய அளவில் நடைபெற்ற சிலம்ப, வில்வித்தை போட்டியில் வென்ற மாணவர்கள் சான்றிதழ் வழங்குதல்,கோப்பை போட்டியில் வென்ற மாணவர்களுக்கு 5 அடி கோப்பை வழங்குதல் மற்றும் படிப்பில், விளையாட்டில் சாதித்த மாணவர்களுக்கு பாராட்டு விருது வழங்கப்பட்டது. மானாமதுரை காவல் ஆய்வாளர் ரவீந்திரன்,தலைமை ஆசிரியர் வினைதீர்த்தான் மற்றும் சாதனை சிறகுகள் ஆசான் தங்கப்பாண்டி அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்கள். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை மாஸ்டர் கலைவளர்மணி முனைவர் பெருமாள் செய்து இருந்தார்.




வேலூர் காட்பாடி சன்பீம் பள்ளியில் ஆண்டு விளையாட்டு விழா:

## மாணவர்கள் லட்சியத்தை அடைய கடுமையாக உழைக்க வேண்டும்: சன்பீம் பள்ளி விழாவில் நீதிபதி பேச்சு

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, மெட்டுக்குளம், சன்பீம் சி.பி.எஸ்.இ பள்ளியில் ஆண்டு விளையாட்டு விழா பள்ளியின் தலைவர் டி. ஹரி கோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தலைவர் டி.ஹரி கோபாலன் பேசுகையில் மாணவர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ள புத்தகத்தை வாசிக்க வேண்டும். வருங்காலத்தில் சன்பீம் பள்ளியிலிருந்து மாணவர்கள் தேசிய அளவில் சாம்பியன் பட்டம் பெறுவார்கள் என சிறப்புரையாற்றினார்.

தாளாளர் தங்கபிரகாஷ், துணைத் தலைவர் டாக்டர். ஜார்ஜ் அரவிந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக காட்பாடி மாஜிஸ்திரேட் பிரேம் ஆனந்த் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவர்களை ஊக்குவித்து, ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற்ற மாணவர்களுக்கும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகோப்பை வழங்கி விழா பேருரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், ஆசிரியர் தொழில் என்பது மிகப்பெரிய பொக்கிஷம் மற்றும் சிறந்த தொழிலாகும். சிறந்த உடல்நலம் வேண்டும் என்றால் மாணவர்கள் விளையாட்டில் பங்கு பெற வேண்டும். உடல் தகுதி தேவை என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். மாணவர்கள் நிறைய பேர் விளையாட்டில் பங்கு பெறுவதில்லை. விளையாட்டில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்போதுள்ள மாணவர்கள் சமூக வலைதளங்களில் மூழ்கியுள்ளனர். விளையாட்டில் அர்ப்பணிப்பு தன்மை என்பது மிகவும் முக்கியம். வாழ்க்கையை அனுபவியுங்கள். வாழ்க்கையில் உங்களுக்கு லட்சியம் வேண்டும். அதனை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். மாணவர்கள் பெரியவர்களை மதிக்க வேண்டும். கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் சச்சின் டெண்டுல்கர், வினோத் காம்பிளியும் ஒரே கால கட்டத்தில் விளையாட சென்றவர்கள். ஆனால் வினோத் காம்பிளி 24 வயது வரையும், சச்சின் டெண்டுல்கர் 40 வயது வரையும் விளையாடினர். இதற்கு காரணம் சச்சின் டெண்டுல்கரின் ஒழுக்கம் மற்றும் ஈடுபாடாகும். இவ்வாறு அவர் பேசினார். இந்த விழாவில் துணைத் தாளாளர் ரத்தீஷ், பள்ளி ஆசிரியர்கள், அலுவலர்கள் பணியாளர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கால்நடைகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தின் கீழ்

## திருப்புவனம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த கால்நடை வளர்ப்போர்கள் பயன்பெறுவதற்கு, அந்தந்த பகுதிக்குட்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்- மாவட்ட ஆட்சயர் தகவல்

சிவகங்கை, ஜூலை.29-

சிவகங்கை மாவட்ட ஊரக பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு இன்றியமையாததாகும். கால்நடைகளுக்கு தேவையான உலர்தீவனம், பச்சை தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகியவற்றை குறிப்பிட்ட விகிதத்தில், கால்நடைகளுக்கு வழங்கும் பட்சத்தில் அதன் உற்பத்தி திறன் அதிகரிக்கும். மேலும், கால்நடை பண்ணையாளர்களின் பண்ணை செலவினத்தில் 70 சதவீதம் தீவனத்திற்கானதாகும்.

அந்தவகையில், திருப்புவனம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த 100 ஏழை கால்நடை விவசாயிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டமானது செயல்படுத்தப்படவுள்ளது.




இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு சொந்தமாக கால்நடை வைத்திருத்தல் வேண்டும். பயனாளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். சங்கத்திற்கு பால் வழங்கயிருத்தல் வேண்டும். மேலும், இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பதாரரின் மாடு சினையுற்று இருத்தல் வேண்டும்.

அரசு விதிமுறைகளின்படி 30% தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பயனாளியாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதில், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 4 மாதங்களுக்கு ஒரு மாட்டிற்கு தேவையான அடர் தீவனம் 360 கிலோ மற்றும் 4 கிலோ கிராம் தாது உப்பு கலவை பெட்டகம் வழங்கப்படும். 50 சதவீத மானியத்தில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு பயனாளியின் பங்களிப்பு தொகை ரூ.6,500/ ஆகும். குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் நபர்கள் அந்தந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விண்ணப்பித்திடல் வேண்டும். சங்க அலுவலர் விண்ணப்பத்தை ஆய்வு செய்தபின் உரிய மேல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

மேலும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு, மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய பயனாளிகள் தற்போது நடைபெற்றுவரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களின் மூலமாகவும் விண்ணபித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.




## தேனி மாவட்ட கோர்ட்டு முன்பு வக்கீல்கள் ஆர்ப்பாட்டம்

தேனி, ஜூலை.29-

தேனி மாவட்ட கோர்ட்டு முன்பு தமிழ்நாடு பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 28.7.2025 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கங்களின் கூட்டமைப்பு தென் மண்டல செயலாளர் வக்கீல் எம்.கே.எம் முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். தேனி வக்கீல் சங்க தலைவர் செல்வன் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர்கள் ராதாகிருஷ்ணன், ஜெயராமன், மாநில துணை செயலாளர் சிவசுப்பிரமணியன், மாநில செயற்குழு உறுப்பினர் சுசி தமிழ் பாண்டி, லதா மற்றும் வழக்கறிஞர்கள் மலை முருகன், சிவப்பிரகாசம், வீரசிவக்குமார், மல்லீஸ்வரன், ராமகிருஷ்ணன், அழகர்சாமி, தமிழ்ச்செல்வன், பூமி ராஜன், ராம்சிங் உள்பட வக்கீல்கள் பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது சென்னை ஐகோர்ட்டு வழக்கறிஞர் வாஞ்சிநாதன் மீது தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை கைவிட வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினார்கள்.

10, 11 , 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற/ தேர்ச்சியில் தவறிய மாணவர்களுக்கு பயனுள்ள வகையில்,

## "மாணவர்களுக்கான உயர்கல்வி குறைதீர் கூட்டம்" வருகின்ற 29.7.2025 அன்று மாவட்ட ஆட்சியரக குறைதீர் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.29-

சிவகங்கை மாவட்டத்தில் 10, 11, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற/ தேர்ச்சியில் தவறிய அனைத்து மாணவர்களும் உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்யும் வகையில், மாணவர்களுக்கான உயர்கல்வி குறைதீர் கூட்டமானது வருகின்ற 29.7.2025 அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சியரக குறைதீர் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்குறைதீர் கூட்டத்தில், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயில உள்ள மாணவர்கள், தேர்வில் தோல்வியுற்ற மாணவர்கள், துணைத்தேர்வு எழுதிய/ எழுதாத மாணவர்கள், கல்விக்கடன் தேவைப்படும் மாணவர்கள்ஆகியோர் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான உயர்கல்வி வழிகாட்டுதலுக்கான ஆலோசனைகளைப் பெறலாம்.

மேலும், உயர்கல்விக்கு விண்ணப்பிக்கத் தேவையான சாதி, வருமானம், இருப்பிட சான்றிதழ் போன்றவை தேவைப்படும் மாணவர்களுக்கு, இசேவை மைய மூலம் உடனடியாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இக்கூட்டத்தில், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு, வழிகாட்டுதல்களை வழங்கவுள்ளனர். எனவே, மாணாக்கர்கள் உயர்கல்வி குறைதீர் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஜூலை.29-

அரசு மற்றும் அரசு சாரா குழந்தைகள் இல்லம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிக்கு அரசால் வழங்கப்படவுள்ள "முன்மாதிரியான சேவை விருதிற்கான" கருத்துருவினை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் வருகின்ற 8.8.2025 ஆம் தேதிக்குள் வழங்கிடல் வேண்டும் மாவட்ட ஆட்சயர் தகவல் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் இளைஞர் நீதி சட்டத்தின் கீழ் பதிவு பெற்று இயங்கி வரும் அரசு மற்றும் அரசு சாரா குழந்தைகள் இல்லம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிக்கு முன்மாதிரியான சேவை விருதுகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், அரசு நெறிமுறைகளுக்குட்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் அரசு மற்றும் அரசு சாரா குழந்தைகள் நிறுவனங்கள், மாவட்ட குழந்தைள் பாதுகாப்பு அலகுகள் ஆகியவைகளை, மாநில அளவிலான தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, முன்மாதிரியான சேவை விருதுகள் மற்றும் 4 பிரிவின் கீழ் தலா ரூ.1,00,000/ பரிசுத் தொகையும் வழங்கப்படும் என அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவாறு, முன்மாதிரியான சேவை விருதிற்கு தங்களது கருத்துருவினை வருகின்ற 8.8.2025 ஆம் தேதிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், அறை எண்.131, முதல் தளம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்திடல் வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு 04575 - 240166 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.




## முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் செம்மொழி விழாவை முன்னிட்டு

திருப்பூர், ஜூலை.29-

திருப்பூர் வடக்கு மாவட்டம் மற்றும் அவிநாசி ஒன்றிய நகர தி.மு.க இலக்கிய அணியின் சார்பில் நடைபெற்ற 18 ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் பாடல் ஒப்புவித்தல் போட்டிகளை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் மேயர் ந.தினேஷ்குமார் துவக்கி வைத்து வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்வில் செயற்குழு உறுப்பினர் சரவணன் நம்பி அவிநாசி நகர செயலாளர் வ.வசந்தகுமார் வடக்கு மாவட்ட கழக இலக்கிய அணி அமைப்பாளர் லக்கி.கே.ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகளுடன் கலந்து கொண்டனர்

## அறிவிப்பு

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை காவல் நிலைய குற்ற எண் 93/2015 u/s 457(2) ,380 (2) r/w 109,34,411&414 ipc,cc.no.1177/2025 சிலை திருட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரி அபுதாஹீர் (எ) அபு 45/2005 த/பெ முகமது இப்ராஹிம் 7வதுகுறுக்கு தெரு, சிக்னல் ஆபீஸ் அருகில் அண்ணா நகர், பல்லாவரம், சென்னை. N என்பவர் நீண்ட நாட்களாக மாண்புமிகு கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம். மதுரை அவர்கள் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாததால் 12.09.2024ம் தேதிமுதல் மாண்புமிகு கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி மதுரை அவர்களால் பிடி கட்டளை (NBW) பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி குற்றம் சாட்டப்பட்ட எதிரி அபுதாஹீர் (எ) அபு என்பவர் மாண்புமிகு கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்றம். மதுரை அவர்கள் முன்புபாக 01.09.2025ம் தேதிஆஜராகும்படி வாய்தா போடப்பட்டுள்ளது அன்றைய தினம் மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் இல்லை எனில் அவரை பிரகனப்படுத்தப்பட்ட (Proclimed offender) தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.





## வேலூர், ஆக்சிலியம் கல்லூரி மற்றும் தாம்பரத்தில் உள்ள சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கல்வி அறக்கட்டளை சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு

வேலூர், ஆக்சிலியம் கல்லூரி மற்றும் தாம்பரத்தில் உள்ள சுற்றுச்சூழல் ஆராய்ச்சி கல்வி அறக்கட்டளை சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு

வேலூர், ஜூலை.29-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர் ஆக்ஸீலியம் கல்லூரியில், வேலூர் ஆக்ஸிலியம் கல்லூரி மற் றும் தாம்பரத்தில் உள்ள சுற்றுச்சூழல் ஆராய் ச்சி கல்வி அறக்கட் டளை (REEF) புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து 25.07.2025 அன்று கடலோர சூழல் பாதுகாப்பு ICCCE25 என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நடைபெற்றது. இந்த மாநாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை (EIACP) மற்றும் தமிழ்நாடு அரசின் வனத்துறை ஆகியவற்றின் நிதியுடன் நடைபெற்றது. இம்மாநாட்டினை கல்லூரி செயலர் முனைவர் மேரி ஜோஸ்பின் ராணி தொடங்கி வைத்தார். முதல்வர் முனைவர் அருட்சகோ அ.ஆரோக்கிய ஜெயசீலி தலைமை உரை வழங்கினார். விலங்கியல் துறை தலைவர் முனைவர் ஏ.மேரி அக்னஸ் வரவேற்பு ரையாற்றி விருந்தினர்களை கௌரவித்தனர். இந்நிகழ்ச்சியில் REEFன் திட்ட இயக்குனர் முனைவர் எஸ்.ராமச்சந்திர பிரபு இயக்கவியல் குறித்து விளக்கவுரை வழங்கினார். தொடக்கவுரையை ணிமிகிசிறின் திட்ட அதிகாரி முனைவர்.கே. முத்துக்குமார் வழங்கி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து தாய் யூனியன் நிறுவனத்தின் தர உறுதி மேலாளர் த்ரீ இயர்ஸ் ஜஸ்டின் சிறப்புரையாற்றினார். மேலும், பல விஞ்ஞானிகள் அவர்களை தொடர்ந்து சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் தொடர்பான தலைப்புகளில் குறைகளை சுட்டிக்காட்டி, இயற்கை வளங்களை பாதுகாப்பதும் இயற்கை வளங்களை மேம்படுத்தி இயற்கையான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் விளக்கவுரை வழங்கி சிறப்பித்தனர். இம்மாநாட்டின் போது பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த பிரபல ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சி பணிகளை பகிர்ந்து சிறப்புரையாற்றினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161